## காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு – 2016

---

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 56 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாக ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 01

கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளின் தொகை நிதிக்கூற்றுக்களில் அட்டுறு அடிப்படையில், கணக்குக்கு கொண்டுவரப்படவேண்டிய போதிலும், மாவட்ட அலுவலகங்களில் பெறப்பட்ட வருமானம், காசு அடிப்படையில் கணக்கிற்கு கொண்டுவரப்படடிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 08

(i) காணியொன்றின் உரித்தைப் பெறுவதற்காக ஆணைக்குழுவிற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில் முறைப்பாட்டாளருக்கு ரூபா 148,715,363 வழங்குமாறு 2009 ஆம் ஆண்டின் போது மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. அத் தினத்திலிருந்து அதற்குரிய வட்டியுடன் செலுத்த வேண்டிய தொகை ரூபா 200 மில்லியனை விஞ்சியிருந்த போதிலும் அதை ஓர் ஒதுக்கீடாக இணங்கண்டு அதற்கான வெளிப்படுத்தள்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 58 ஆம் பிரிவின் பிரகாரம், பொறுப்பொன்றை தீர்ப்பதற்குத் தேவையான பெறுமதிக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய எதிர்கால நிகழ்வுகள் உள்ளன என்பதற்கான நோக்கரீதியான போதிய இலக்கை தழுவிய சாட்சி காணப்படும் போது ஒதுக்கீட்டு பெறுமதியில் அது வெளிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறானினும் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்காக 2006 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதி வரை கொடுப்பனவு தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 32,763,795 ஆன ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் அதற்காக மிகை கொடுப்பனவு செலுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுகள் மூலம் எந்த ஒரு ஒதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான குத்தகை வாடகை கொடுப்பனவு தாமதமடைந்ததன் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய மிகைக் கட்டணம் ரூபா 1,417,607 தொகையினால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரியதாக பெறவேண்டிய குத்தகை வாடகை, கனிப்பொருள் வளங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய வருமானம், அறவிடப்பட வேண்டிய பாவனை கட்டணம் மற்றும் அறவிடப்பட வேண்டிய நுழைவு கட்டணம் முறையே ரூபா 63,403,562, ரூபா 205,143,151, ரூபா 26,661,071 மற்றும் ரூபா 1,079,043 ஆக ரூபா 296,286,827 கூட்டுத்தொகை வருமானமாக கணக்கிடபடாமை காரணமாக அப் பெறுமானத்தினால் வருமானம் மற்றும் சொத்துக்கணக்குகளிலிருந்து விடுபட்டு காணப்பட்டன.

(இ) 2015 ஆண்டில பேரேட்டு பதிவுகளில் இடம்பெற்ற வழுக்களின் சீராக்கமொன்று 2016 ஆண்டில் மீண்டும் சீராக்கப்பட்டமையின் காரணமாக கணனி மற்றும் உதிரிப்பாகங்களுக்கான பெறுமானதேய்வு ஏற்பாட்டுக் கணக்கு ரூபா 786,034 இனால் குறைத்தும் முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல் கணக்கு கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) இந்த காணி தொடர்பாக முன்னர் பெறப்பட்ட குத்தகை வாடகையில் 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 6,858,292 தொகை ஆண்டுக்குரிய வருமானமாக கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் திரண்ட மிகைக்கு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்த வேண்டி ஏற்பட்ட ரூபா 1,923,334 தொகையான மிகை கட்டணத்தில் ரூபா 962,194 தொகையான பணம் ஓய்வூதிய பணிக்கொடை செலவினத்தின் கீழும், எஞ்சிய ரூபா 961,140 தொகை ஊழியர் நம்பிக்கை நிதிய செலவின் கீழும் கணக்குவைக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மேலதிக கட்டணமாக செலுத்திய தொகை மேலதிக கட்டணமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் காணியாக காட்டப்படடிருந்த ரூபா 676,169,345 ஆன பெறுமதி, 1978 ஆம் ஆண்டு முதன் முறையாக கணிக்கப்பட்டிருந்த காணி பெறுமதிக்கு 2003 மற்றும் 2006 ஆண்டுகளில் செய்யப்பட்ட சிறு செம்மையாக்கல் தவிர்த்து 2006 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரைக்கும் மாற்றம் இன்றி ஒரே பெறுமதியாக காட்டப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் வருடம்தோரும் மேற்கொள்ளப்படும் சுவீகரிப்பு மற்றும் விற்பனை போன்றவற்றின் செம்மையாக்கலில் சரியான பெறுமதி பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 1 ஆம் மற்றும் 2 ஆம் கட்ட இழப்பீட்டு நிச்சயமின்மையின் கீழ் ரூபா 222,444,438 ஒட்டுமொத்தப் பொறுப்பு நிலவியபோதும், மதிப்பீடு மற்றும் இழப்பீட்டுப் பிரிவினது அறிக்கைப் பிரகாரம் வெளியீட்டாளர்களுக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டி இருந்த வட்டியுடனான இழப்பீடு ரூபா 585,800,000 ஆகும். அதற்கமைய ரூபா 363,355,562 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டமையால் இதன் சரியான தன்மையை உறுதி செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருமானப் பிரிவினது அறிக்கையிபடி மீளாய்வாண்டு முடிவில் பெற வேண்டிய குத்தகை வாடகை வருமானம் ரூபா 185,995,884 ஆகும். எனினும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 152,725,231 ஆகக் காட்டப்பட்டமையால் குத்தகை வாடகை வருமானத்தில் ரூபா 33,270,653 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டது.

(இ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட முற்பணம், முற்பண பதிவேடுகளோடு ஒப்பிடும்போது ரூபா 84,297 ஆன வேறுபாடும், குத்தகை வாடகை முற்பணம் ஆகியவற்றை பட்டோலையோடு ஒப்பிடும்போது ரூபா 640,000 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அக்கொடுக்கல் வாங்கல்களை சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| கணக்கீட்டு விடயம் | பெறுமதி | சமர்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| காணி | 676,169,345 | காணிகள் தொடர்பான விபரமடங்கிய பதிவேடுகள்/பட்டோலை |
| காகிதாதிகள் கையிருப்பு | 3,182,913 | விரிவான பட்டோலைகள் |
| இழப்பீட்டுத் தொங்கற் கணக்கு | 222,444,438 | |

### 2.3 பெற வேண்டிய மற்றும செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 ஆம் ஆண்டு முதல் நானாவித கடன்பட்டோரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,311,017 தொகை மீளாய்வாண்டிலும் அவ்வாறே காணப்பட்டதுடன் அப் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கு உரிய மூல ஆவணங்கள் ஆணைக்குழுவிடம் இருக்கவில்லை.

(ஆ) 1 ½ ஆண்டுகள் முதல் 07 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலப்பகுதியினுள் சேவையை விட்டுச்சென்ற/வேலை நீக்கம் செய்யப்பட்ட 48 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 745,785 ஆகும்.

(இ) 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குள் காணி விற்பனை முற்பணம் ரூபா 11,302,992 தொகையும், 11 ஆண்டுகளுக்கு மேலான செலுத்த வேண்டியுள்ள ரூபா 11,230,850 தொகையான குத்தகை வாடகை முற்பணம் என்பவற்றை தீர்ப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீள் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்களில் ரூபா 181,500 தொகை 7 ஆண்டுகள் முதல் 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக முன் கொண்டுவரப்படுவதை காணக்கூடியதாக இருந்தது. மேலும் வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவின் கீழ் பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியவை எனக் குறிப்பிடப்படுகின்ற ரூபா 800,130 றெறுமதியொன்று 11 ஆண்டுகளுக்கு மேலாக நிலவியதுடன் அவற்றை கணக்குகளில் தீர்ப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) இழப்பீட்டுத் தொங்கல் II ஆம் கட்ட கணக்கிலிருந்து 2005 ஆண்டு முதல் 12 வருட காலமாக இழப்பீடு தீர்க்கப்பட்டிருக்காததுடன் அவ் அசைவற்ற மீதி ரூபா 109,959,493 ஆகும்.

(ஊ) அரச நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் மூலம் நீண்டகாலமாக குத்தகை பணம் அறவிடப்பட்டிருக்காததுடன் கணக்காய்விற்கு அரிக்கையிடப்பட்டுள்ள இரண்டு நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய குத்தகை பணம் ரூபா 10,258,731 ஆகும்.

## 2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகாரச்சட்டம் | ஆணைக்குழு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | பொது முயற்சிகள், மேலதிக நிதியினை முதலீடுசெய்வதற்கு நிதி அமைச்சரின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு அனுமதி பெறப்படாமல் பணிப்பாளர் சபை அனுமதி பிரகாரம் ரூபா 1,369,328,834 முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமானக் கோவையின் நிதிப்பிரமானம் 757 | 6 சொத்து விடயங்களுக்குரிய ரூபா 115,505,336 கூட்டுத்தொகைக்குரியபொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2011 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய 11/நானா(015-1) ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களினால் காணி வெளிப்படுத்துகையில் அமைச்சரவையின் முன்கூட்டிய அனுமதி பெறப்பட வேண்டிய போதிலும் , கருங்கல் தொடர்பாக காணி குத்தகைக்கு வழங்கும் செயன்முறையின் போது அவ்வாறு அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2002 மே 23 ஆந் திகதிய 2002/11 ஆம் இலக்க நிர்வாக சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு | காணி குத்தகைக்கு வழங்குகையில் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டதன் பின்னர் விடய பொறுப்பு அமைச்சரின் அனுமதிக்கு சமர்பிக்கப்படுவதுடன் அனுமதி பெறப்பட்டு அளவைக் கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக அளவை செயற்பாடுகளை நிறைவு செய்து 5 ஆண்டுகளின் பணம் அறவிடப்பட்டதன் பின்னரே அமைச்சரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டிருந்தது. |
| (ஊ) 2008 ஏப்ரல் 17 ஆந் திகதிய 2008/பொது/1 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் 1(i) மற்றும் (ii) ஆம் பிரிவுகள் | குறித்தவொரு ஆண்டினது நிலுவையாகவுள்ள பயன்பாட்டுக் கட்டணம் அவ்வாண்டிலேயே அறவிடப்பட்டு முடிவுக்கு வர வேண்டுமெனவும், நிலுவை பயன்பாட்டுக் கட்டணம் தாமதமின்றி அறவிடப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பல வருடங்களாக பயன்பாட்டுக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

5 ஏக்கரிலும் விஞ்சிய விவசாய செய்ததிட்டங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெறப்படாமல் மொனராகலை தோட்டடத்தின் 280 ஏக்கர் தனியார் கம்பனியொன்றுக்கு 2011 ஆண்டின் போது 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்ககப்பட்டிருந்தது. கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10,764,622 தொகையான குத்தகைப பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவினது செயற்பாட்டுப் பெறுபேறுகள் ரூபா 120,442,701 ஆன மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 55,708,450 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் பெறுபேறுகளில் ரூபா 64,734,251 ஆன வளர்ச்சி காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு பெறப்பட வேண்டிய குத்தகை வாடகை வருமானம் இவ்வாண்டில் கணக்கு வைக்கப்பட்டமையால் குத்தகை வாடகை வருமானம் ரூபா 61,376,383 இனால் அதிகரித்தமையும், ஏனைய செயற்பாட்டு வருமானம் அதாவது நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேறி உண்டியல் வட்டி வருமானம் ரூபா 42,446,909 வினால் அதிகரித்தமையும் இவ் வளர்ச்சிக்கு பிரதானமான காரணிகளாகக் காணப்பட்டன.

முன்னைய ஆண்டுளின் நிதி விளைவுகளை பகுத்தாராய்ந்து பார்க்கும் போது 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியான நிதி மிகையொன்று நிலவியதுடன் 2012 ஆம் ஆண்டின் பின்னர் கிரமமாக மிகை குறைவடைந்து 2016 ஆண்டில் மீண்டும் குறிப்பிடக்கூடிய அளவு வளர்ச்சி காட்டப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் ஆணைக்குழுவின் பங்களிப்பை மதிப்பிடுகையில் முன்னைய ஆண்டுகளுக்கு ஒப்பாக முறையே 2013 ஆண்டில் ரூபா 12,728,112 ஆன வீழ்ச்சியும், 2014 ஆண்டில் ரூபா 14,994,085 ஆன வளர்ச்சியும் 2015 ஆண்டில் ரூபா 14,829,018 ஆன வீழ்ச்சியும் 2016 ஆண்டில் ரூபா 95,018,964 ஆன வளர்ச்சியையும் காணக்கூடியதாக இருந்தது.

### 3.2 ஆணைக்குழுவிற்கு எதிராக அல்லது ஆணைக்குழுவால் ஆரம்பிக்கப்பட்ட சட்டபூர்வ நிகழ்வுகள்

2016 திசெம்பர் 31 இல் ஆணைக்குழுவிற்கு எதிராக மற்றும் ஆணைக்குழுவினால் தொடரப்பட்டுள்ள வழக்குகளில் எண்ணிக்கை 562 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 68 ஆனதுடன், ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகளில் எண்ணிக்கை 22 ஆனதுடன் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள வழக்குகளில் எண்ணிக்கை 35 ஆகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவதொரு நபருக்குச் சொந்தமான அதி கூடிய அளவிலும் கூடிய கமத்தொழில் காணிகள், அந்த நபர்கள் சொந்தமாக வைத்துக்கொள்ளாமை, பாதுகாக்கப்படுதல், சுவீகரித்தல் மற்றும் அக்காணிகளில் உற்பத்தி செய்தல், அக் காணிகளில் ஏற்படும் தொழில்வாய்ப்புக்களின் அளவை அதிகரிக்கும் விளைவினை தரும் விதத்தில் அவற்றைப் பயன்படுத்துதல் என்பன ஆணைக்குழுவின் மூல நோக்கமாகும். ஆணைக்குழுவின் நோக்கத்தை நிறைவேற்றுதல் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) யாப்புரீதியான உறுதி பெற்றுக்கொடுத்தல்

(i) 1972-1974 இற்கு இடைப்பட்ட கால எல்லையில் உரித்துறுதி சமர்பிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக இதுவரையில் அதாவது 40 ஆண்டுகள் கடந்தும் யாப்புரீதியான உறுதி பெற்றுக்கொடுக்கப்படாத நபர்களின் எண்ணிக்கை 235 ஆகும். அவற்றில் 25 சதவீதம் காணி வரிபடம் முன்வைக்கப்படாமை காரணமாகவும் 53 சதவீதம் உரித்துரிமைளர்கள் முன்வராமை காரணமாகவும் யாப்புரீதியான உறுதி பெற்றுக்கொடுக்க முடியாதிருந்தது.

(ii) காணி வரிபடம் சமர்பித்தல், மாவட்ட காணி மறுசீரமைப்பு அதிகார சபையின் தலையீட்டில் சம்பந்தப்பட்ட உரித்துரிமைளர்களைக் கொண்டு செய்து கொள்ள வேண்டிய போதிலும் 40 ஆண்டுகளுக்கும் மேலான காலபகுதியினுள் காணி வரிபடங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இவ்வாறு யாப்பு ரீதியான உறுதி தாமதித்த போதும் காணிகளின் பயன்பாடு உரித்துரிமையாளர்களிடம் இருப்பதன் மூலம் ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்ட இக்காணிகள் பயனுள்ளதாக பாவிப்பதற்கு மற்றும் வருமானம் உழைப்பதற்கும் காணப்படுகின்ற வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

#### (ஆ) இழப்பீடு செலுத்துதல்

(i) 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் இழப்பீடு வழங்களுடன் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட உரிமை உறுதி செய்யப்படாத 104 கோவைகள் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்தபோதும் அவற்றில் 3 இற்கு மட்டுமே 2016 ஆண்டின் போது இழப்பீடு வழங்கப்படக் கூடியதாக இருந்தது.

(ii) அதிகாரச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் உரிமை உறுதியாகியுள்ள ஏதாவதுதொரு நபருக்கு வழங்கப்பட வேண்டிய ஏதாவதொரு இழப்பீடு அவரால் மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது அவர் மரணமடைந்துள்ள போது அல்லது அவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு முடியாத சந்தர்ப்பமொன்றில் இழப்பீட்டிற்குரியவர் அதனைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் சிவில் நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதிமன்றம் ஒன்றில் அதனை வைப்பு செய்ய வேண்டிய போதிலும் 127 கோவைகளுக்குரிய தொகையை நீதிமன்றத்தில் வைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயல்நடவடிக்கை திட்டத்தின் இலக்கை நிறைவேற்றலின் முன்னேற்றம்**

(i) செயல்நடவடிக்கை திட்டத்தின் குறிப்படப்பட்டிருந்த உச்ச எல்லையை விஞ்சிய காணிகளை வெளிப்படுத்திக் கொள்ளல், ஆணைக்குழுவிற்கு சாட்டப்பட்டுள்ள காணி பதிவுசெய்தல் மற்றும் உரிமையும் சுவடிகள் பதிவும், காணி விடயம் தொடர்பாக நிரைரேற்று உத்தியோகத்ர்களுக்கு மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், விஷேட பதவிகளுக்கு கணனி பயிற்சிகளை வழங்குதல், முறையான செயலாற்றல் முறைமை ஒன்றை ஆரம்பித்தல், சுவடிகளை பாதுகாத்தல் மற்றும் முறையான சுவடிகள் கூடமொன்றை நிறுவுதல். தேவையற்ற கோவைகளை அழித்தல், சுவடிகள் கூடத்திலுள்ள கோவைகளை கணனிமயப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் எவையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்டிருந்த 16 செயற்பாடுகளின் இலக்குகளில் 50 சதவீதத்திற்கும் குறைவான வளர்ச்சியே அடையப்பெற்றிருந்தது.

(iii) ஒட்டுமொத்தமாக எடுக்கும் போது செயல்நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளில் 50 சதவீதம் அல்லது அதற்கும் அதிகமானவைகளை செயற்படுத்தலின் முன்னேற்றம் 35 சதவீதமான குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள எபர்பொய்ல் தோட்டக் காணியில் 20 பேர்ச் தொலைதொடர்ப்பு பரிமாற்ற கோபுரமொன்றை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2014 ஆண்டில் 30 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்தும் அதற்குப் பதிலாக செலுத்த வேண்டிய வாடகை பணம் மற்றும் மதிப்பீடும் மற்றும் சேவைக் கட்டணமாக ரூபா 2,707,711 தொகை கணக்காய்வு அறிக்கையின் திகதி வரையிலும் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டக் காணிகான குத்தகைக்கு வழங்குவதுடன் தொடர்பான குரிப்பான செயல் ஒழுங்கை குறிப்பிடக்கூடிய எழுத்து மூல வழிகாட்டியொன்று ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டிருக்ககவில்லை.

(இ) 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 50 ஏக்கரிலும் அதிகமான காணிகளை ஆணைக்குழு சுவீகரித்தன் பின்னர் யாப்புரீதியான உறிதியைப் பெற்றுக் கொடுக்கும் போது குருணாகல் மாவட்டத்தில் கு/121 உரித்துரிமையாளருக்கு சொந்தமான 89 ஏக்கர் 27 பர்சா் காணி ஆணைக்குழுவிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்த அச் சுவீகரிப்பு தொடர்பாக யாப்புரீதியான உறுதியைப் பெற்றுக் கொடுத்தல் 40 ஆண்டுகளுக்கும் அதிக காலம் தாமதமாகிக் காணப்பட்டது.

(ஈ) கொ/2962 ஆம் இலக்க உரித்துரிமையாளர்களுக்கு சொந்தமான 175 ஏக்கர் 36.66 பேர்ச் அளவான காணி 1975 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் ஆணைகுழுவிற்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. அதற்கான யாப்புரீதியான உறுதியாக கைமாற்றுக் காணி இரத்தினபுரி, கேகாலை மற்றும் கம்பஹா மாவட்டங்களின் 50 ஏக்கர் பெற்றுக் கொடுக்க அமைச்சரவை நிலைக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 40 ஏக்கர் மட்டுமே விடுவிக்கப்பட்டிருந்தது.

(உ) குருணாகல் பெருந்தோட்ட கம்பனியினூடாக நிர்வகிக்கப்பட்ட தனவ்கந்த தோட்டத்தின் 05 ஏக்கர் விசாலமான காணி 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 22(1)(ஆ) பிரிவின் கீழ் தனி நபர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக கருங்கல் உடைப்பதற்கு குருணாகல் பெருந்தோட்ட கம்பனியின் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் குத்தகைக்கு எடுத்த நபர் சமர்ப்பித்திருந்த தகவல்கள் பொய்யானதாகும்.

(ஊ) ஆணைக்குழுவின் புத்தளம் மாவட்ட அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,591,676 தொகை செலவிடப்படடிருந்ததுடன், 2016 ஜுலை 29 திகதி நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அவ்வாறு இருந்தும் கணக்காய்வு திகதியான 2017 மார்ச் 23 திகதிவரையிலும் அலுவலக பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

தோரவெடியவத்த காணியின் யாப்பு ரீதியான உறுதியாக 50 ஏக்கர் அளவு காணி உரித்துரிமையாளருக்கு மீண்டும் கையளிக்கப்படடிருந்த போதும் எல்லைகள் சரியாக இனங்காணப்படாமை காரணமாக உரித்துரிமையாளரினால் மேலதிகமாக 108 ஏக்கர் காணி பயன்படுத்தப்பட்டிருந்தது. சட்ட விரோதமான மேலதிக பயன்பாட்டுக் காணி 108 ஏக்கரின் பயன்பாட்டை பெற்றுக்கொள்வதற்கோ குத்தகைக்கு வழங்கவோ நடவடிக்கை எடுக்கப்படாமையினால் ஆணைக்குழுவிற்கு நட்டம் ஏட்பட்டிருந்தது.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள 593 ஏக்கர் அளவான மெத்தேகெதரவத்த காணியில் 06 நபர்களுக்கு மொத்தமாக 319 ஏக்கர் காணி அமைச்சரவையின் தீர்மானமின்றி 2016 ஆண்டு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அங்கு அரசாங்க மதிப்பீடொன்று இன்றி சராசரி மதிப்பீடான ரூபா 4,546,000 தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) பெதியகந்த தோட்டத்தில் 100 ஏக்கர் அளவான காணி 30 வருட குத்தகை அடிப்படையில் 2004 ஆண்டின்போது தனியார் கம்பனியொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அது 2004 ஆகஸ்ட் 12 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தடைசெய்யப்பட்டிருந்தது. மேலும் இவ் ஒப்படைப்பு தொடர்பாக ஆணைக்குழுவின் இங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் பாவனையிலுள்ள காணி ஒப்படைப்பு முறைமையும் பின்பற்றப்படாமல் ரூபா 100,000 ஆன குத்தகை வாடகை முற்பணம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. இது தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள தலைவரின் பதிலின் பிரகாரம் 2017 மார்ச் 20 ஆம் திகதி குத்தகையாளர் பயன்படுத்தும் காணியின் அளவை அவருக்கு மீண்டும் ஒப்படைப்பதற்கு தலைவர் தீர்மானித்திருந்தார்

(இ) இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பிலிபிட்டிய பிரதேச செயலக பிரிவின் எத்ஹொடகல நிந்தகம எனும் காணியின் 49 ஏக்கர் 03 ரூட் 30 பர்சஸ் விசால அளவு தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 100,000 ஆன குத்தகை முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டு 2003 ஆகஸ்ட் 22 திகதி பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2016 ஆகஸ்ட் 21 திகதியில் உள்ளவாறு நிலுவை குத்தகை தொகை மற்றும் 10 சதவீத மேலதிக கட்டணத்துடன் ரூபா 2,527,224 அறவிடப்பட வேண்டிய போதிலும் கம்பனி மீளாய்வாண்டு இறுதி வரையிலும அந்த குத்தகை நிலுவையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதுள்ளை மாவட்டத்தின் நிகபொத முதுவானவத்த எனும் காணியின் 98 ஏக்கர் விசால அளவு தனியார் கம்பனியொன்றிற்கு 2004 ஆண்டின் போது 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இவ் ஒப்படைப்பு முறையற்ற ஒப்படைப்பு என்பதால், 2004 ஆகஸ்ட் 12 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அது இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அமைச்சரவை தீர்மானத்தை கவனிக்காது இக்காணியை 30 ஆண்டுகளுக்கு அக் கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் ஒப்படைக்க 2008 ஆகஸ்ட் 26 திகதி ஆணைக்குழு தீர்மானமொன்றை எடுத்திருந்தது. மேலும் சுமார் 100 ஏக்கர் கொண்ட இக் காணியினால் ஆணைக்குழுவிற்கு எவ்வித வருமானமும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) 1985 ஆண்டில் அம்பலமானவத்த காணியின் 05 ஏக்கர் அளவு வெள்ளை திருவாணக்கல் செயற்திட்டம் ஒன்றிற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு விற்பனையில் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இவ் ஒப்படைப்பும் 2004 ஆகஸ்ட் 12 திகதிய அமைச்சரவை தீர்மானம் மூலம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. மேலும் 2002 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை கம்பனி மூலம் சிலிகா உடைத்தல் மேற்கொள்ளப்படுவதனால் அதற்கான சட்டரீதியான நடைமுறைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே இதனால் ஆணைகுழுவிற்கு பெருமளவு வருமானத்தினை ஈட்டிக்கொள்ள முடியாது போயிருந்தது.

(இ) காலி மாவட்டத்தில் அமைந்துள்ள பிலகொடவெலி தோட்டத்தின் 660 ஏக்கர் அளவு 2004 பெப்ரவரி 27 ஆந் திகதி கூட்டெரு உற்பத்தி செயற்திட்டத்திற்கு தனியார் கம்பனியொன்றிற்கு குத்தகைக்காக வழங்கப்பட்டிருந்தது. இக் குத்தகை வழங்கலும் 2004 ஆகஸ்ட் 12 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தடைசெய்யப்பட்டிருந்தது. அவ்வாறே அக் கம்பனி மூலம் கூட்டெரு செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு பதிலாக பிரிதொரு நடவடிக்கைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மீண்டும் அக் காணியை சுவீககரிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் கணக்காய்வு திகதி வரையிலும் எவ்வித குத்தகை பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பஹா மாவட்டத்தில் படகொல்ல, ரேனகல ஆகிய காணிகளிலிருந்து 48 ஏக்கர் காணியை தனியார் கம்பனியொன்றிற்கு 2004 ஆண்டு குத்தகைக்கு வழங்கும் போது மூல மதிப்பீடு ரூபா 224,000 என குத்தகைப் பணம் நியமிக்கப்பட்டிருந்ததுடன், 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை அரச மதிப்பீட்டினைப் பெற்று குத்தகை திருத்தப்படவேண்டிய போதிலும், 2016 திசம்பர் 31 திகதிக்கு 12 ஆண்டுகள் கடந்திருந்தமையால் குத்தகை திருத்தம் 02 முறைகள் மதிப்பீடு செய்யப்படவேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்காததுடன் 50 சதவீதம் பெறுமானம் சேர்க்கப்பட்டு தற்காலிக குத்தகை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு குத்தகை அறவிடப்பட்டிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

1972 இன் 01 ஆம் காணி மறுசீரமைப்பு அதிகாரசட்டத்தின் 45(1)(ஆ) பிரிவிற்கு முரணாக காணி அமைச்சின் செயலாளரினால் 2015 பெப்ரவரி 01 திகதியிலிருந்து அமுலாகும் வகையில் ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தார். மேலும் அவரின் கடமையளிப்பின் கீழ் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேலும் முன்னேற்றுவதற்காக வருடாந்த பாதீடு மற்றும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளுடன் தயாரிக்கப்படவேண்டிய போதிலும் அச் செயற்பாடு நடைபெற்றிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் ஆணைகுக்ழுவின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு ஐயவினா தொடர்பில் ஆணைகுழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரிவுகள் உள்ளடங்கும் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்காததுடன் 1971 இன் 38 ஆம் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(5)(டி) பந்தியின் பிரகாரம் அரையாண்டு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினது உள்ளவாறான மற்றும் பாதீடு செய்யப்பட்ட வருமானமும் செலவினமும் பரிசீலிக்கப்பட்ட போது 02 வருமான விடயங்கள் தொடர்பாக 39 சதவீதம் முதல் 53 சதவீதம் வரை மற்றும் 16 செலவின விடயங்கள தொடர்பாக 38 சதவீதம் முதல் 167 சதவீதம் வரையிலான குறிப்பிடத்தக்க விலகல்கள் வெளிப்படுத்தப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 5.4 கணக்காய்வுக் குழு

2010 திசம்பர் 14 ஆந் திகதிய பீஈடீ/55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை பிரகாரம் ஆகக் குறைந்தது ஆண்டொன்றிக்கு 4 கணக்காய்வு குழு கூட்டத்தடவைகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது 3 கூட்டத்தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 5.5 தீர்க்கப்படாதுள்ள செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணனி மென்பொருள் தொகுதியொன்றை கொள்வனவு செய்வதற்கு 2002 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 17,000,000 தொகை 15 வருடங்களாக கணனிகளுக்கான முற்பணமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த குறிப்பை தீர்த்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் கணக்காய்வுத் தினமான 2017 மார்ச் 25 ஆந் தகிதியளவிலும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

(ஆ) 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலவிய 08 அரச நிறுவனங்களிலருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,135,625,366 தொகை மீளாய்வாண்டிலும் அவ்வாறே நிலவியதுடன் அது தொாடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ள இவ்வாண்டிலும் கூட முடியாமல் இருந்தது. 2016 மார்ச் 23 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதிலின் பிரகாரம் அமைச்சின் செயலாளர், தலைவர் மற்றும் திறைசேரியின் தலையீட்டின் பிரகாரம் எல்லா தரப்பினரையும் அழைத்து தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது வரையிலும் தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாகக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்பு |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கைகள் நாளதுவரையாக்கப்படாமை |
| | (ii) வருமானப் பிரிவு, காணி ஒப்படைப்புப் பிரிவு, செயற்திட்டப் பிரிவு அடங்கலாக ஏனைய சகல பிரிவுகளும் கணக்குப் பிரிவுடன் இணைப்பு செய்யப்படாமை |
| (ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | (i) சில அரச நிறுவனங்களிலிருந்து ஆணைக்குழுவிற்கு அறவிட வேண்டிய தொகை தொடர்பில் குறித்த பிரிவால் அறிவிக்கப்படாமையால் கணக்கீடு செய்ய முடியாமை |
| | (ii) அறவிடப்பட வேண்டிய குத்தகைப் பணம் தொடர்பாக காலப் பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிராமை. |
| | (iii) கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளாமை |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்திட்டங்களுக்கு காணி குத்தகைக்கு வழங்கல் | (i) | செயற்திட்டங்களுக்கு காணி குத்தகைக்கு வழங்கும் போது குத்தகைக்காரர்களை தெரிவு செய்யும் முறைமை காணப்படாமை. |
| | | (ii) | ஏதாவதொரு செயற்திட்டம், செயற்திட்டமொன்றென தீர்மானிப்பதற்கு உறிய தீர்மான சாதகங்கள் யாது என மற்றும் அத் தீர்மான சாதகங்களை பகுப்பாய்ந்து செயற்திட்டமொன்றா இல்லையா என்பதை கவனித்தல் ஆணைக்குழு மூலம் இதுவரை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | வருமான சேகரிப்பு | (i) | மாவட்ட அதிகார குழு மூலம் ஒவ்வொரு அலுவலகத்திலும் ஒவ்வொரு வகை தொடர்பாக அறவிடப்பட வேண்டிய நானாவித வருமானம் விரிவாக பதியப்படாமை. |
| | | (ii) | நிலுவை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | களஞ்சியக் கட்டுப்பாடு | (i) | இருப்புப் பதிவேடு நாளதுவரையாக பேணப்படாமை. |
| | | (ii) | வருடாந்த இருப்பு மெய்மையாய்வினை மேற்கொள்ளாமை. |
| | | (iii) | களஞ்சிய வளாகம் முறையாக பராமரிக்கப்படாமை. |